# கழகம் அறிவித்துள்ள திட்டங்களெல்லாம் நிறைவேற நம் உதயசூரியன் சின்னத்துக்கு வாக்களியுங்கள்!

## அண்ணா நகர் தொகுதியில் நே.சிற்றரசுவை ஆதரித்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தேர்தல் பரப்புரை!

சென்னை,ஏப்.11 –

**சென்னை, அண்ணா நகரில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், நேற்று முன்தினம் அண்ணா நகர் சட்டமன்ற தொகுதியின் தி.மு. கழக வேட்பாளர் நே.சிற்றரசுவை ஆதரித்து உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்து பிரச்சாரம் மேற்கொண்டார்.**

**அப்போது அவர், ``தி.மு.கழகத்தின் தேர்தல் அறிக்கையில் அறிவித்துள்ள திட்டங்களெல்லாம் நிறைவேற்றப்பட வேண்டும் என்றால், மீண்டும் நம் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைய வேண்டும். நிச்சயம் அமையும். அதற்கு நீங்கள் நம் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, இந்த அண்ணா நகர் தொகுதியை முதலிடமாக இடம் பெறச் செய்து, அதிக வாக்கு வித்தியாசத்தில் சிற்றரசு அவர்களை வெற்றிபெறச் செய்து, சட்டமன்றத்துக்கு அனுப்புங்கள், என அன்போடு கேட்டுக்கொள்கின்றேன் ” என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:**





தலைவர் உங்களிடத்தில் ஒரு வெற்றி வேட்பாளரை ஒப்படைத்திருக்கிறார், சகோதரர் சிற்றரசு அவர்களை வெற்றிபெற வைத்து, அனுப்பி வைக்கவேண்டும் என்று உங்கள் கைகளில் ஒப்படைத்திருக்கிறார். சிற்றரசுவைப் பற்றி நான் இங்கே உங்களிடத்தில் அறிமுகப்படுத்த வேண்டிய அவசியமே கிடையாது. அத்தனை பேருக்கும் தெரிந்தவர்தான் நம் வெற்றி வேட்பாளர் சிற்றரசு அவர்கள்.

சிற்றரசு அவர்களுக்கு வாக்கு கேட்பதில் எனக்கு என்ன பெருமை என்றால், நான் இளைஞர் அணி செயலாளர், சிற்றரசு இளைஞர் அணியில் பயிற்சி பெற்று இன்று மாவட்டக் கழகச் செயலாளராகப் பொறுப்பு வகிக்கிறார். விரைவில் சிற்றரசு அவர்கள் உங்களின் ஒத்துழைப்போடு, உங்களின் அன்போடு அவர் சட்டமன்ற உறுப்பினராகவும் கண்டிப்பாக ஆகப் போகிறார். அந்த உரிமையோடு இங்கே வாக்கு கேட்க வந்திருக்கிறேன். இன்னும் சொல்லப் போனால், என் சேப்பாக்கம்திருவல்லிக்கேணி தொகுதிக்கும் மாவட்டச் செயலாளர் சகோதரர் சிற்றரசு அவர்கள்தான்.

### கலைஞர் வென்ற தொகுதி

எனக்கும் சிற்றரசு அவர்களுக்கும் ஓர் ஒற்றுமை உண்டு. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நின்று வென்ற சேப்பாக்கம்திருவல்லிக்கேணித் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் நான். அதே மாதிரி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நின்று வென்ற அண்ணா நகர் தொகுதியில் அவர் விரைவில், சட்டமன்ற உறுப்பினராகப் போகிறார்.

இன்று தமிழ்நாட்டில் சேப்பாக்கம்திருவல்லிக்கேணி தொகுதி வளர்ச்சி விஷயங்களில் இன்று ஒரு முன்மாதிரி தொகுதியாக முன்னேறி இருக்கிறது என்றால், விரைவில் இந்த அண்ணா நகர் தொகுதியும் ஒரு முன்மாதிரி தொகுதியாகச் சிற்றரசு அவர்கள் மாற்றிக் காட்டுவார். அதற்கு அவரைச் சட்டமன்றத்துக்கு நீங்கள் வெற்றிபெற வைத்து அனுப்ப வேண்டும்.

உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்துச் சென்ற முறை கிட்டத்தட்ட 28,000 வாக்குகள் வித்தியாசத்தில் அண்ணன் மோகன் அவர்களை வெற்றிபெறச் செய்து அனுப்பினீர்கள். இந்த முறை நான் உங்களிடத்தில் கேட்பதெல்லாம் குறைந்தது 50,000 வாக்குகள் வித்தியாசத்தில் சகோதரர் சிற்றரசு அவர்களை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

நான் சிற்றரசு அவர்களை அழைத்துக் கொண்டு இங்கே உங்களையெல்லாம் சந்தித்து வாக்கு கேட்கிறேன் என்றால், என்ன அர்த்தம்? கடந்த ஐந்து ஆண்டுகள் இந்தத் தொகுதிக்கு பல்வேறு திட்டங்களை செய்து கொடுத்திருக்கிறோம் என்ற உரிமையோடு கேட்க வந்திருக்கிறேன்.

### அண்ணா நகர் திட்டங்கள்

கும்பாலம்மன் கோயில் தெருவில் ஒரு சமுதாய நலக்கூடம் அமைக்கப்பட்டிருக்கிறது.

அண்ணா நகர் பூங்காவின், டாக்டர் விஸ்வேஸ்வரய்யா கோபுரம் இன்று புனரமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அருகிலேயே ஒரு முழுநேர கிளை நூலகம் திறக்கப்பட்டிருக்கிறது.

என்.ஜி.ஓ. குடியிருப்பில் ஒரு புதிய அங்கன்வாடி மையம் கட்டப்பட்டிருக்கிறது. அசோக் நகர் பகுதியில் புதிய அங்கன்வாடி மையம் கட்டப்பட்டுள்ளது.

கெனால் ரோட்டில் பேட்மிண்டன் இறகுப்பந்து மைதானம் மற்றும் உடற்பயிற்சிக் கூடம் அமைக்கப்பட்டிருக்கிறது. புதிய பல்நோக்கு மையம் அமைக்கும் பணிகள். 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 102வது வட்டத்தில் 160 பேட்டரி வாகனங்கள் நிறுத்தக்கூடிய வகையில் மாநகராட்சி வாகன நிறுத்துமிட வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

### புதிய அரசு மருத்துவமனை

எம்.ஜி.ஆர் குடியிருப்பில் மெட்ரோ வாட்டர் நேரடிக் குழாய் மூலம் இன்று விநியோகம் செய்யப்படுகிறது. 107வது வட்டத்தில் புதிய அரசு மருத்துவமனை திறந்திருக்கிறோம்.

எம்.எச்.குடியிருப்பில் புதிய தரைப்பாலம். யு.பி.எஸ்.சி. பயிற்சி மையம் கட்டுவதற்கு நடவடிக்கை. செனாய் நகரில் ஆறு ஏக்கர் நிலத்தில் கிரிக்கெட் மைதானம் அமைக்கின்ற பணி. இப்படி அனைத்துப் பணிகளையும் செய்து முடித்துவிட்டு, அந்த உரிமையோடு உங்களிடத்தில் மீண்டும் உதயசூரியன் சின்னத்துக்கு வாய்ப்பு அளியுங்கள். சகோதரர் சிற்றரசு அவர்களை அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்து சட்டமன்றத்துக்கு அனுப்புங்கள் என்று உரிமையோடு கேட்க வந்திருக்கிறேன்.

வெற்றிபெற்றால் என்னென்ன செய்வோம் என்பதையும் நம் தலைவர் அவர்கள் வாக்குறுதிகளாகக் கொடுத்திருக்கிறார்.

### 2,000 ரூபாயாக உயர்வு

மகளிர் உரிமைத் தொகை 1,000 ரூபாயிலிருந்து, 2,000 ரூபாயாக உயர்த்தித் தருவோம் என்று தலைவர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார். கல்வி ஊக்கத்தொகை 1,000 ரூபாயை, 1,500 ஆக உயர்த்தித் தருவோம் என்று தலைவர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார். முதியோர் உதவித்தொகை 1,200லிருந்து 2,000 ரூபாயாக உயர்த்தித் தருவோம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம். முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமல்லாமல் எட்டாம் வகுப்பு வரை உயர்த்தப் போவதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் 35 லட்சம் கல்லூரி மாணவர்கள் அனைவருக்கும் மடிக்கணினி வழங்கப்போவதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

### 8,000 ரூபாய் மதிப்புள்ள கூப்பன்

முக்கியமாக ஒரு வாக்குறுதி கொடுத்திருக்கிறார், நம் தலைவர் அவர்கள். ஆட்சி அமைந்த உடனே நம் முதலமைச்சர் அவர்கள் அனைத்து மகளிருக்கும் 8,000 ரூபாய் மதிப்புள்ள ஒரு கூப்பன் கொடுத்துவிடுவார்.

அந்தக் கூப்பனை வைத்து மகளிர் நீங்கள் உங்கள் வீட்டுக்கு மின்சாதன பொருட்கள் என்ன தேவையோ குளிர்சாதனப் பெட்டி, தொலைக்காட்சி, மிக்ஸி, கிரைண்டர் எதுவாக இருந்தாலும் அதை நீங்களே முடிவு செய்து உங்கள் விருப்பப்படி நீங்களே வாங்கிக்கொள்ளலாம்.

தி.மு.கழகத்தின் தேர்தல் அறிக்கையில் அறிவித்துள்ள திட்டங்களெல்லாம் நிறைவேற்றப்பட வேண்டும் என்றால், மீண்டும் நம் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைய வேண்டும். நிச்சயம் அமையும். அதற்கு நீங்கள் நம் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, இந்த அண்ணா நகர் தொகுதியை முதலிடமாக இடம் பெறச் செய்து, அதிக வாக்கு வித்தியாசத்தில் சிற்றரசு அவர்களை வெற்றிபெறச் செய்து சட்டமன்றத்துக்கு அனுப்புங்கள், என அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்

### அன்போடு கேட்கிறேன்

உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன். இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால் தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன், டாக்டர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன். உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து சகோதரர் சிற்றரசு அவர்களை அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்து சட்டமன்றத்துக்கு அனுப்புங்கள். உங்களையெல்லாம் சந்திப்பதில் மகிழ்ச்சி, உங்களின் அன்புக்கும் வரவேற்புக்கும் நன்றி.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

---

## களத்தில் இளைஞர் அணி

**மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து கழக இளைஞர் அணி நிர்வாகிகள் வீடு வீடாகச் சென்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.**



காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்.



தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதி, கோவை வடக்கு மாவட்டம்.



உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, திருப்பூர் கிழக்கு மாவட்டம்.



இராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, இராணிப்பேட்டை மாவட்டம்.



அவிநாசி சட்டமன்றத் தொகுதி, திருப்பூர் வடக்கு மாட்டம்.



மண்ணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதி, திருச்சி வடக்கு மாவட்டம்.



நன்னிலம் சட்டமன்றத் தொகுதி, திருவாரூர் மாவட்டம்.



இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தொகுதி, சென்னை வடக்கு மாவட்டம்



கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதி, நாகப்பட்டினம் மாவட்டம்.